## திருத்தம்

# கிழக்கு மாகாணசபை
# மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

**கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2018**

மேற்படி ஆட்சேர்ப்பு சம்பந்தமாக, 14.12.2018 ஆந் திகதிய வெள்ளிக்கிழமை “தினகரன்” பத்திரிகையின் 15 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் கிழக்கு மாகாணசபை இணையத் தள அறிவித்தல் தொடர்பாக.

கிழக்கு மாகாண சபை இணைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பந்தி இல. 9.1 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

9.1 பரீட்சைக்கட்டணம் ரூபா. 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கெ ாள்ளப்படமாட்டாது.

பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது பரீட்சைக் கட்டணத்தை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு எழுதிய காசுக் கட்டளையொன்றின் மூலம் மட்டும் செலுத்த முடியும். மாற்றப்படும் அலுவலகம் திருகோணமலை என குறிப்பிடுதல் வேண்டும்.

கிழக்கு மாகாணசபை இணையத் தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**எம்.வை.சலீம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

## கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2018

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(அ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தகைமைகளையுடைய கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளிடமிருந்தும், 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்காக பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **04.01.2019** ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

**01. தகைமைகள் :**

**1.1 பொதுத் தகைமைகள் :**

1.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. **04.01.2019** ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.4. (அ). விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக ஆகக்குறைந்தது மூன்று (03) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல்.

அல்லது

(ஆ). விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக ஆகக்குறைந்தது மூன்று வருடங்களாவது (03) தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் இந்த மாகாணத்திற்கு வந்து வதிவது தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கக்கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும்.

1.1.5. கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மேலதிகமாக கீழே 2.2 இல் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் ஆகக்குறைந்தது மூன்று (03) வருட நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளும் இவ்ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு :** மேலே 1.1.4.(அ) மற்றும் 1.1.5. இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக அண்மித்த மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பதோடு, மேலே 1.1.4.(ஆ) இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தனது வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழுடன் தனது துணையின் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக அண்மித்த மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**1.2 கல்வித் தகைமைகள் :**

1.2.1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக **04.01.2019** ஆந் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பிக்கும் பாடத்திற்கமைவான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

1.2.2. க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**02. ஆட்சேர்ப்பு முறையும் சேவை நிபந்தனைகளும் :**

2.1 தற்போது இலங்கை ஆசிரியர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு விண்ணப்பித்தல் தவறொன்றாக கருதப்படும்.

2.2 சிங்கள மொழிமூல பாடசாலைக்கு மற்றும் சிங்கள மொழிமூலமான பாடசாலைகளில் இரு மொழி மூலமான (சிங்களம் - ஆங்கிலம்) விஞ்ஞானம், கணிதம், தகவல் மற்றும் தொடர்பாடல்

தொழில்நுட்பம் (ICT) ஆகிய பாடங்களுக்கு கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மேலதிகமாக, பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். இருப்பினும் இவ்விண்ணப்பதாரிகளுக்கு 1.1.4 இல் கூறப்பட்ட நிபந்தனை ஏற்புடையதாகாது என்பதுடன், ஆட்சேர்ப்பின்போது பின்வரும் ஒழுங்கில் முன்னுரிமை அளிக்கப்படும்.

1. மாவட்டத்திற்குள் நிரந்தர வதிவிடமுடைய பட்டதாரிகள்
2. கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரிகள்
3. மேலே 1.1.4.(ஆ) இன்படி வேறு மாகாணத்திலிருந்து இம்மாகாணத்திற்கு வந்து வதியும் பட்டதாரிகள்
4. பதுளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகள்

2.3 இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எழுத்துமூலப் போட்டிப்பரீட்சை நடாத்தப்படும். இந்த எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் தீர்மானிக்கும் எண்ணிக்கையிலானோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது). நேர்முகப்பரீட்சையில் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் காணப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மற்றும் பிரயோகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.4 ஆட்சேர்ப்பின்போது கிழக்கு மாகாணத்தில் வதியும் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டத்தை நியமனத்தின்போது முதலாவது மாவட்டமாக கருதப்படும். அம்மாவட்டத்தில் வெற்றிடங்களை முழுமையாக நிரப்பிய பின்னர், விண்ணப்பதாரியினால் விண்ணப்பித்த பாடம்/பாடங்களிற்கமைவாக வேறொரு மாவட்டத்தில் வெற்றிடம் காணப்படுமிடத்து, விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "**விண்ணப்பிக்கும் மாவட்டம்**" என்ற பகுதியில் குறிப்பிடும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படுவர். பிற மாகாணத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "**விண்ணப்பிக்கும் மாவட்டம்**" என்ற பகுதியில் குறிப்பிடும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படுவர்.

**2.5 அட்டவணை 01** : வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் பாடங்களும் பின்வருமாறு.

| பாட இலக்கம் | பாடம் | மாவட்டங்களும் மொழி மூலமும் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திருகோணமலை | | மட்டக்களப்பு | அம்பாறை | | |
| | | சிங்களம் | இரு மொழி மூலம் | இரு மொழி மூலம் | சிங்களம் | இரு மொழி மூலம் | |
| | | | த/ஆ | த/ஆ | | த/ஆ | சி/ஆ |
| 01 | விஞ்ஞானம் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 02 | கணிதம் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 03 | இரண்டாம் மொழி (தமிழ்) | --- | --- | --- | ✓ | --- | --- |
| 04 | சித்திரம் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 05 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 06 | நூலக விஞ்ஞானம் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 07 | சிங்கள மொழி | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 08 | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 09 | புவியியல் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 10 | கணக்கீடு | ✓ | --- | --- | --- | --- | --- |
| 11 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 12 | பொறியியற் தொழில்நுட்பவியல் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 13 | சுகாதாரமும் உடற்கல்வியும் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 14 | கீழைத்தேய சங்கீதம் | --- | --- | --- | ✓ | --- | --- |
| 15 | நாட்டியம் (தேசிய) | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 16 | வழிகாட்டலும் ஆலோசனையும் | ✓ | --- | --- | ✓ | --- | --- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | ஆரம்பக்கல்வி | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 18 | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 19 | மனைப்பொருளியல் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 20 | நாடகமும் அரங்கியலும் | ✓ | --- | --- | ✓ | --- | --- |
| 21 | சிங்கள இலக்கியம் | --- | --- | --- | ✓ | --- | --- |
| 22 | விஞ்ஞானம் இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | --- | ✓(*) | --- | ✓(*) | ✓(**) |
| 23 | கணிதம் இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | ✓(*) | ✓(*) | --- | ✓(*) | ✓(**) |
| 24 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | ✓(*) | ✓(*) | --- | ✓(*) | ✓(**) |
| 25 | புவியியல் இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | ✓(*) | ✓(*) | --- | ✓(*) | ✓(**) |
| 26 | சுகாதாரமும் உடற்கல்வியும் இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | ✓(*) | ✓(*) | --- | ✓(*) | ✓(**) |
| 27 | முயற்சியாண்மைக் கல்வி இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | --- | --- | --- | --- | ✓(**) |
| 28 | வணிகமும் கணக்கீடும் இருமொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம் / சிங்களம் - ஆங்கிலம்) | --- | --- | --- | --- | ✓(*) | --- |

**குறிப்பு 1 : "✓" எனும் குறியீடு வெற்றிடத்தையும், "----" எனும் குறியீடு வெற்றிடமின்மையையும் குறிக்கும்.**

**குறிப்பு 2 : "✓(*)" என்பது தமிழ் பாடசாலைகளுக்குரிய வெற்றிடத்தையும் "✓(**)" என்பது சிங்கள பாடசாலைகளுக்குரிய வெற்றிடத்தையும் குறிக்கும்.**

**குறிப்பு 3 : த/ஆ - இரு மொழி மூலம் (தமிழ் - ஆங்கிலம்),**
**சி/ஆ - இரு மொழி மூலம் (சிங்களம் - ஆங்கிலம்)**

2.6 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பாடம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது. அதே போன்று அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.7 மாவட்ட அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதனால் 10 ஆண்டுகள் முடிவடையும் வரை எவ்வகையிலும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்றினை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் செய்து கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.8 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 27,740 – 300 x 6 – 380 x 7 – 445 x 2 – ரூபா. 33,090/- ஆகும். இச்சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆவது படிநிலையில் பட்டதாரிகள் அமர்த்தப்படுவர். 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

2.9 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.10 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்புடையதாகும்.

2.11 அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2 கட்புலனற்ற / செவிப்புலனற்ற / ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் ''கட்புலனற்ற / செவிப்புலனற்ற / ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்'' எனக்குறிப்பிட வேண்டும்.

3.3 **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான கல்வித்தகைமைகளை பார்வையிட்டு தங்களின் பட்டத்திற்குரித்தான பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்களை தனித்தனியாக உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி வேறு வேறான கடித உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பாடங்களுக்காகவும் விண்ணப்பிக்கும்போது தனித்தனியாக விண்ணப்பிக்காது ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தாலோ, பற்றுச்சீட்டை தனித்தனியாக உரிய இடத்தில் ஒட்டப்பட்டிருக்காவிட்டாலோ அவ்விண்ணப்பப்படிவம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.5 இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.6 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **04.01.2019** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

3.7 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/18/08** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**04. பரீட்சைக்கான அனுமதி :**

4.1 விண்ணப்பங்களை அனுப்பி வைத்த அடிப்படைத் தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4.2 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டையின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி முதலாவது அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

குறிப்பு : **பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.**

## 05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

## 06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 07. பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :

இப்பரீட்சை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். அதில் சிங்கள மொழிமூல மற்றும் சிங்கள மொழிமூலமான பாடசாலைகளில் இரு மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணபித்தோர் சிங்கள மொழி மூலமும், தமிழ் மொழிமூலமான பாடசாலைகளில் இரு மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணபித்தோர் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

## 08. பாடத்திட்டம் :

### 8.1 எழுத்துப்பரீட்சை :

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இரண்டாகும். இந்த இரண்டு வினாப்பத்திரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்ததாகக் காணப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**01.** உளச்சார்பு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆசிரியத் தொழிலுக்கான திறமையினையும் தர்க்க ரீதியான சிந்தனை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**02.** பொது அறிவு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரியத்துறைக்கு இயைபுடைய அந்தத்துறை தொடர்பான பொது அறிவு அத்துடன் / அல்லது தேசிய ரீதியில் இடம்பெற்ற மற்றும் இடம் பெறுகின்ற கல்வியின் போக்கு சம்பந்தமான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீனமயமாக்கல் சம்பந்தமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

### 8.2 பிரயோகப்பரீட்சை :

8.2.1. நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் 05 நிமிட சமர்ப்பிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

8.2.2. இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்திற்காக விண்ணப்பித்தோர் மாத்திரம் இப்பாடத்திற்காக 10 நிமிட சமர்ப்பித்தலொன்றை செய்வதுடன், பிரயோகப்பரீட்சைக் குழுவினால் கேட்கப்படும் விடயங்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

8.2.3. இரு மொழிமூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணபித்துள்ள விண்ணப்பதாரிகள் ஆங்கிலம் மொழிமூலம் மட்டும் தமது சமர்ப்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

| பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

**09. பரீட்சைக்கட்டணம் :**

9.1 பரீட்சைக்கட்டணம் ரூபா. 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

9.2 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.ep.gov.lk என்ற கிழக்கு மாகாண இணையதளத்தில் வெளியிடப்படும்.

10. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| <u>நகரம்</u> | <u>நகர எண்</u> | <u>நகரம்</u> | <u>நகர எண்</u> |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

11. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

13. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும், ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பிலும், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும், பட்டமொன்றின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பிலும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய அச்செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

<u>அட்டவணை 02</u>

| பாட இலக்கம் | மொழி மூலம் | பாடம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | சிங்களம் | விஞ்ஞானம் (Science) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞானமானிப் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானதுறையுடன் தொடர்புடைய பாடத்தை (உயிரியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல்) பிரதான பாடமாகக்கொண்ட விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | சிங்களம் | கணிதம் (Mathematics) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீக விஞ்ஞானமானிப் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணித பாடத்தினை (இணைந்த கணிதம், கணிதம், தூய கணிதம், பிரயோக கணிதம் அல்லது பௌதீகவியல்) பிரதான பாடமாகக்கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | சிங்களம் | இரண்டாம் மொழி (தமிழ்)<br>(Second Language – Tamil) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சிங்கள மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்தில் ஆகக்குறைந்தது அதி திறமைச் சித்தியைப் ("B") பெற்றிருத்தல் வேண்டும் அல்லது தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியைப் ("C")பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தமிழ் மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் ஆகக்குறைந்தது அதி திறமைச் சித்தியைப் ("B") பெற்றிருத்தல் வேண்டும் அல்லது சிங்கள மொழியும் இலக்கியமும் பாடத்தில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியைப் ("C") பெற்றிருத்தல் வேண்டும். |
| 04 | சிங்களம் | சித்திரம் (Art) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சித்திரத்தில் விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சித்திரப்பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 05 | சிங்களம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>(ICT) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து ஆகக்குறைந்தது 02 வருட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். |
| 06 | சிங்களம் | நூலக விஞ்ஞானம்<br>(Library Science) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நூலக விஞ்ஞான பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
